# இலங்கை சனநாயக சோஷலிக் குடியரசின் அரசாங்கம்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## ஆர்வ வெளிப்பாடு (EOI)

# சர்வதேச போட்டிரீதியான விலைமனு

| | |
|---|---|
| **திகதி:** | **2024.05.19** |
| தலைப்பு: | வர்த்தக மையங்களாக கொழும்பு நகரில் பிரதான ரயில் நிலைய கட்டிடங்களை வடிவமைத்தல், கட்டுமானம், நிதி, நடவடிக்கை மற்றும் பராமரிப்புக்காக (DBFOM) பெறுகைக்கான முன்மொழிவு கோரிக்கை (RFP) |
| முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி: | 2024.07.15, 14.00 மணி (இலங்கை நிலையான நேரம்) |

1. அரச தனியார் கூட்டாண்மை (PPP) ஏற்பாடு ஒன்றில் வர்த்தக மையங்களாக கொழும்பு நகரில் பிரதான ரயில் நிலைய கட்டிடங்களை வடிவமைத்தல், கட்டுமானம், நிதி மற்றும் நடவடிக்கைக்காக (DBFO) தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் (தொழில்வழங்குநர்) முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தம் ஆரம்பத்தில் குறைந்தது முப்பது (30) ஆண்டுகளாகும்.

**திட்டத்தின் கண்ணோட்டம்**

அடையாளம் காணப்பட்ட வளாகங்களில் கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை மற்றும் கொம்பனித் தெருவில் அமைந்துள்ள ரயில் நிலையங்கள் உட்படுவதோடு இவை அனைத்தும் தினசரி 100 ரயில்கள் ஊடாக 10,000 பயணிகள் செல்லும் நாட்டின் பிரதான வர்த்தக மையப் பகுதியில் அமைந்துள்ளன. அடையாளம் காணப்பட்ட ஆறு நிலையங்களுக்கு வெளியே உள்ள நிலையங்களுக்கான முன்மொழிவுகளையும் ஆர்வமுள்ள தரப்பினர் சமர்ப்பிக்கலாம்.

இந்த அடையாளம் காணப்பட்ட நிலையங்களை நவீன வர்த்தக மற்றும் சமூக மையங்களாக மேம்படுத்துவது, பயணிகளின் வசதியை அதிகரிப்பது மற்றும் வளாகத்தின் வசதிகளை அதிகரிப்பதன் மூலம் கிடைக்கும் அனுபவம் மற்றும் நகர்ப்புற சமூகத்தை தரமான வாழ்வுக்கு மாற்றும் எதிர்பார்ப்பை கொண்டுள்ளது.

இலங்கை புகையிரத சேவை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலாபகரமான வருமானம் மற்றும் கொழும்பின் பெருநகரத்திற்கு நிலையான நகர்ப்புற அபிவிருத்தியைக் கொண்டுவரும் ஒரு கூட்டாண்மைக்கு இந்த முக்கிய முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற உங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

**வேலைகளின் நோக்கம்**

வர்த்தக மையங்களாக கொழும்பு நகரில் பிரதான ரயில் நிலைய கட்டிடங்களை வடிவமைத்தல், கட்டுமானம், நிதி, நடவடிக்கை மற்றும் பராமரிப்புக்கு (DBFOM) அரச தனியார் கூட்டாண்மையை வெற்றிகரமாக செயற்படுத்தும் நோக்கில் பரந்த அளவிலான செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை இந்த நோக்கம் உள்ளடக்கியுள்ளது. தவிர:

1. வடிவமைப்பு மற்றும் திட்டம்: விலைமனுதாரர் அபிவிருத்திக்கான கருத்தியல் வடிவமைப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும்.
2. நிர்மாணம்/ அபிவிருத்தி: நிர்மாண செயற்பாடுகளுக்காக சுருக்கமான முறைமை அறிக்கை ஒன்று
3. நடவடிக்கை மற்றும் பராமரிப்பு: முகாமைத்துவம், பராமரிப்பு உட்பட எதிர்பார்க்கப்படும் நடவடிக்கை பணிகளை விபரித்தல் மற்றும் திட்டம் அல்லது சேவைகள் செயல்பட்டதும், அவற்றின் வழக்கமான செயல்பாடுகள்.
4. நிதி: முதலீட்டு தேவைகள், நிதியளிப்பு வடிவங்கள் அல்லது தனியார் கூட்டாண்மையாளரிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் நிதி பங்களிப்பு உட்பட நிதி பொறுப்புகளை வரையறுத்தல்.
5. இணக்கம் மற்றும் தரநிலைகள்: விலைமனுதாரர்கள் ஒவ்வொரு நிலைய இடங்களுக்காகவும் வெவ்வேறு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுவதோடு குறித்த திட்ட முன்மொழிவுகள் தற்போதுள்ள நிலத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நிலைய நிலத்திலும் சாத்தியமான மேம்பாடு பற்றிய விபரங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்படுத்தப்படும் கட்டிட ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய பொதுவான மற்றும் கீழ் தரப்பட்டுள்ள வடிவமைப்பு வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

2. ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு சர்வதேச போட்டிரீதியான விலைமனு அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.
3. பின்வரும் முக்கிய தகைமைகளுடனான தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் மாத்திரம் இந்த விலைகேட்பில் பங்கேற்றல் வேண்டும்:
   (i) இந்த பெறுகையில் பங்கேற்பதற்கு விலைமனுதாரரின் நிதி மற்றும் தொழில்நுட்ப திறன் நிரூபிக்கப்படல் வேண்டும்.
4. (ஆங்கில மொழியிலான) ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களை பரீட்சிப்பது மற்றும் வாங்குவதற்கு மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்:

   திரு விமுக்தி பதிரண, உதவி அத்தியட்சகர் (வர்த்தகம்) - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்

   **இலங்கை புகையிரத திணைக்களம்,**
   **த.பெட்டி இல. 355, கொழும்பு 10.**
   **தொலைபேசி: 0775647201, 0114600152**
   **மின்னஞ்சல்: *vimukthipathirana.slr@gmail.com***
   **இணையதளம்: www.railway.gov.lk**

   1. இ.ரூபா பத்தாயிரம் (இலங்கை ரூபா 10,000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.05.20 ஆம் திகதி தொடக்கம் 2024.07.12 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் 09.00 மணி மற்றும் 15.00 மணிக்கு இடையே (உள்ளூர் நேரம்) 05ஆவது பந்தியின் கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான ஆர்வ வெளிப்பாட்டை வாங்க முடியும் என்பதோடு மேலும் நீடிப்புகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

5. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இலங்கை, பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் ஐஐ, 7ஆவது மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அலுவலகத்தில் 2024.06.10 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும்.
6. முன்மொழிவை 2024.07.15 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

   **தலைவர், அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு (CANC),**
   **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
   **7ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II,**
   **பத்தரமுல்லை, இலங்கை.**

7. விலைமனுதாரர் தமது முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் ஏற்றல் வேண்டும் என்பதோடு விலைக்கேட்பு நடைமுறையின் நடத்தல் மற்றும் முடிவு எவ்வாறு அமைந்தபோதும், அந்த செலவுகளுக்கு தொழில்வழங்குநர் கடப்பாடு அல்லது பொறுப்பேற்காது.

**தலைவர்**
**அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II,**
**பத்தரமுல்லை, இலங்கை.**
**Ref. No. SRS/F.8023**